## சுற்றாடல் அமைச்சு

# விசேட அறிவித்தல்

## ஐதரோபுளோரோகாபன் வகுதிக்குரிய (HFC) குளிரூட்டிகளை இறக்குமதிசெய்வதைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம்

இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருவது யாதெனில், ஓசோன் படையை நலிவடையச் செய்யும் ஐதரோபுளோரோகாபன் வகுதிக்குரிய (HFC) குளிரூட்டிகளை இறக்குமதி செய்யும்போது, மொன்ட்றியல் சாசனத்தின் ஒழுங்குவிதிகளுக்கமைவாக இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்தைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 2020 தொடக்கம் 2022 ஆகிய ஆண்டுகள் வரை இறக்குமதி செய்யப்படும் ஐதரோபுளோரோகாபனை அடிப்படையாகக் கொண்ட குளிரூட்டிகளின் அளவின் சராசரியே இலங்கைக்குரித்தான ஐதரோபுளோரோகாபன் ஒதுக்கீட்டின் அடிமட்டமாகக் கருதப்படும் என்பதுடன் 2024 ஆம் ஆண்டிலிருந்த அவ்வடிமட்டத்தை விஞ்சும் வகையில் ஐதரோபுளோரோகாபன் வகுதிக்குரிய குளிரூட்டிகளை இறக்குமதி செய்ய இலங்கையால் இயலாது. ஆயினும் 2020ஆம் ஆண்டுதொடக்கம் 2023ஆம் ஆண்டுவரை இறக்குமதி செய்யப்படும் ஐதரோபுளோரோகாபன் வகுதிக்குரிய குளிரூட்டிகளின் அளவு தொடர்பில் எந்தவொருகட்டுப்பாட்டுப் பொறிமுறையும் பிரயோகிக்கப்படாது என்பதுடன் குறித்தகாலத்தில் அக்குளிரூட்டிகளுக்கு இறக்குமதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள தேசிய ஓசோன் அலகின் சிபாரிசும் பெறப்படத் தேவையில்லை. 2020ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டுவரை (அடிமட்டம்) ஒவ்வொரு இறக்குமதியாளராலும் இறக்குமதி செய்யப்படும் ஐதரோபுளோரோகாபன் வகுதிக்குரிய குளிரூட்டிகளின் அளவுக்கமைய 2024ஆம் ஆண்டிலிருந்து தேசிய ஓசோன் அலகின் சிபாரிசுடன் இறக்குமதியாளர்களுக்கு அனுமதிப்பத்திரத்தை வழங்க இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

30.06.2020 அன்று வெளியிடப்பட்ட 2182/10 எனும் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் குளிரூட்டி இறக்குமதியாளர்களின் தகவலுக்காக ஐதரோபுளோரோகாபன் வகுதிக்குரிய குளிரூட்டிகளுக்கான ஒத்திசைவுக் குறியீடுகள் (HS Codes) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இப்படிமுறைக்கமைய, 2024ஆம் ஆண்டு தொடக்கம் 2045ஆம் ஆண்டுவரை ஐதரோபுளோரோகாபன் வகுதிக்குரிய குளிரூட்டிகளின் பாவனையைச் சீராகவும் முறையாகவும் படிப்படியாகக் குறைப்பதற்கு அமைச்சு திட்டமிட்டுள்ளது. அதேவேளை ஐதரோபுளோரோகாபன் வகுதிக்குரிய குளிரூட்டிகளைப் பிரதியீடு செய்யும் வகையில் அவற்றிற்கு மாற்றீடாக வேறு குளிரூட்டிகளை அறிமுகம் செய்வதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை அமைச்சு எடுக்கும்.

0112034221/0112034222 என்ற தொலைபேசி இலக்கங்களுடாகவோ அல்லது noulanka@gmail.com என்ற மின்னஞ்சலூடாகவோ அல்லது www.mmde.gov.lk என்ற இணையத்தளமூடாகவோ அமைச்சிலுள்ள வளி வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் அலகினைத் தொடர்புகொண்டு இவ்விடயம் தொடர்பான மேலதிக விபரங்களை அறியமுடியும்.

**செயலாளர்,**
**சுற்றாடல் அமைச்சு,**
**‘‘சோபாதம் பியச”,**
**416/C/1, றொபேட் குணவர்தன மாவத்தை,**
**பத்தரமுல்ல.**